பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 14 திங்கட்கிழமை (27.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130




## வவுனியாவில் மினி சூறாவளி

14 வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுமாலை வீசிய மினி சூறாவளியால் 14 வீடுகள் மற்றும் பயன்தரும் மரங்கள் சேதமடைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக இடிமின்னலு 02

யாழ்.கடற்கரை பகுதியில்

## இளம் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடற்கரை பகுதியில் இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியை சேர்ந்த திருமதி பிரதீபா டில்ஷான் (வயது 31) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு சடலமாக 02

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில்

# தனிமைப்படுத்தல் முகாம் அமைப்பு

### அப் பகுதி மக்களின் எதிர்ப்பையடுத்து பொலிஸ், இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் தனிமைப்படுத்தல் முகாம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பதட்ட நிலை ஏற்பட்டதை தொடர்ந்து அப்பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)



## முப்படையினரால் பொது மக்களுக்கு கொரோனா பரவும் அபாயம்

சமூக இடைவெளியை பேணுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இராணுவத்தளபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

முப்படையினரால் பொது மக்களுக்கு கொரோனா பரவும் அபாயம் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் சமீபத்தில் அதிகரித்துள்ள கோவிட்- 19 நோய்த்தொற்றுகள் காரணமாக 8 மாவட்டங்கள் ஆபத்திலுள்ளன எனவே சமூக இடைவெளி தேவை என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இராணுவ தளபதியிடம்கோரிக்கை விடுத்துள்ளது.

லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாக்கு அரச வைத்திய 02

## நேற்று மட்டும் 71 பேருக்கு கொரோனா தொற்று

### பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 523 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 523ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று புதிதாக இடையாளம் காணப்பட்ட 71 பேரைத் தொடர்ந்தே குறித்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதுவரை 120 பேர் குணமடைந்து வைத்திய 02

## சீதுவ இராணுவ கப்டனுக்கு கொரோனா தொற்று

கப்டனின் மனைவி வெலிசர முகாமில் பணியாற்றி வருகின்றார்

(கொழும்பு)

நீர்கொழும்பு - சீதுவ இராணுவ விசேட படைப்பிரிவு முகாமின் கப்டன் தர அதிகாரிக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து 150 இராணுவத்தினரைக் கொண்ட அந்த முகாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவ கப்டனின் மனைவி வெலிசர கடற்படை முகா 02

## நாடு முழுவதும் இன்று ஊரடங்கு

(கொழும்பு)

விடுமுறையில் சென்றுள்ள முப்படை அதிகாரிகளை முகாம்களுக்கு அழைப்பதனை இலகுபடுத்தும் வகையில் இன்று 27 திங்கட்கிழமை நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு 02

கடற்படை வீரருக்கு

## வவுனியாவில் கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் கடற்படை வீரர் ஒருவர் கொரோ தொற்றுடன் இணங்காணப்பட்டுள்ளார்.

வெலிசர கடற்படை முகாமில் கடமையாற்றி விடுமுறையில் வவுனியா, மகாகச்சகொடி

## கடற்படை அதிகாரி வெலிசர முகாமில் மரணம்

எலிக் காய்ச்சல் என அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு வெலிசர கடற்படை தளத்தின் கடற்படை அதிகாரி ஒருவர் எலிகாய்ச்சல் காரணமாக நேற்று அதிகாலை மரணமடைந் 02



வேலணை மத்திய கல்லூரி உட்பட

## வடக்கில் 15 பாடசாலைகளில் கொரோனா தனிமைப்படுத்தல் மையம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூரி உட்பட வடக்கில் 15 பாடசாலைகளில் கொரோனா தனிமைப்படுத்தும் மையங்கள் அமைப்பதற்கு இராணுவத்தினர் கையகப்படுத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோன தொற்று அதிகரித்துள்ள நிலையில், கொரோன தொற்று இனங்காணப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களை 02

## துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் மயங்கி விழுந்து மரணம்



யாழ்.ஆனைப்பந்தி சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, நாவலர் வீதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் திடீரென வீதியில் சரிந்து வீழ்ந்து உயிரிழந்தார். 02

## சதுர்த்தி வழிபாட்டிற்காக கோவிலுக்குச் சென்ற 18 பேர் கைது

யாழ்.அத்தியடியில் சம்பவம்

(யாழ்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோவிலில் சதுர்த்தி பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட 18 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். சதுர்த்தி விரதம் பூஜை வழிபாடு நேற்று மாலை இடம் 02

## வவுனியாவில்...

பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு வந்திருந்த கடற்படை வீரரிடம் மேற்கொள்ளப்பட்ட இரத்த பரி சோதனையின் போதே குறித்த வீரருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 38 வயதான குறித்த கடற்படை வீரரை கொரோனா தடுப்பு வைத்தியசாலைக்கு அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-3,250)

## நாடு முழுவதும்...

சட்டம் 28. செவ்வாய் அதிகாலை 5 மணிக்கு நீக்கப்பட்டு அன்றை தினம் இரவு 8 மணி முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கடற்படை அதி...

துள்ளார் என்று கடற்படை அறி வித்துள்ளது.

வெலிசர கடற்படை பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த கலைன்பிந்துவேவா பகுதியை சேர்ந்த லெப்டினன்ட் கமாண்டர் சுனில் பண்டார (35-வயது) என்பவரே மரணமடைந்தவராவார்.

அவருக்கு கொரோனா தொற்று பரிசோதனை செய்த போது தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

அத்துடன் வெலிசர கடற்படை தளத்தின் கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு கொரோனா நடைமுறையை பின்பற்றி அவரது இறுதி சடங்கை செய்ய சட்ட வைத்திய அதிகாரி உத்தரவிட்டுள்ளார். (ம-3)

## இளம் பெண் சட...

மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## வவுனியா...

டன் கூடியமழை பெய்துவருகின்றது.

இந்நிலையில் வவுனியா கனகராஜன்குளம் வடக்கு பகுதியில் நேற்றையதினம் பெய்த கடும் மழையுடன் கூடிய மினி சூறாவளியால் 14 வீடுகளின் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் பயன்தரும் நிலையில் காணப்பட்ட மரவள்ளி மற்றும் வாழைமரங்களும் சேதமடைந்துள்ளன. (ம-3,299)

## துவிச்சக்கர வண்டி...

இச் சம்பவம் நேற்று மாலை 6.25 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் ஒட்டுமடத்தைச் சேர்ந்த தம்பு வாமதேவன் (வயது - 65) என்பவரே உயிரிழந்தவராவார்.

உறவினர் வீடு ஒன்றுக்குச் சென்று திரும்பிய நிலையிலேயே முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து 1990 அம்புலன்ஸ் வண்டிக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக அங்கு அம்புலன்ஸ்வண்டி வந்த போதும் முதியவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## சதுர்த்தி வழிபாட்...

பெற்றது.

பூஜையில் கலந்து கொண்ட 18 பேரையும் யாழ்ப்பாணம் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,101)

### கடந்த ஒருமாத காலத்தினுள்

# ஊரடங்கை மீறிய 38,500 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 38,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் பொது போக்குவரத்தினை அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக போக்குவரத்து சேவை முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தினை அடிப்படையாக கொண்டு வெளியே செல்வதற்கு நாள் அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையானது தங்களுக்கு இலகுவாகும் என போக்குவரத்து சேவை முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள ஆலோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு பொது போக்குவரத்திலும் சமூக இடைவெளியை பேண வேண்டும். இதற்கமைய பேருந்து ஒன்றில் பயணிக்க கூடிய பயணிகளின் எண்ணிக்கையில் 50 வீதத்திற்கும் குறைவானவர்களே பயணிக்க முடியும்.

தற்போது இலங்கை போக்குவரத்து சபையிடம் சுமார் 5 ஆயிரத்து 700 பேருந்துகளும் தனியார் துறையிடம் சுமார் 23 ஆயிரம் பேருந்துகளும் உள்ளன.

இவ்வாறான நிலையில் இலங்கை போக்குவரத்து சபையிடம் உள்ள அனைத்து பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்தினாலும் கொரோனா தொற்றுக்கு முன்னர் இருந்த நிலைமையில் போக்கு வரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாது.

எனவே சுகாதார பாதுகாப்பு அரச மற்றும் தனியார் துறையில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர்களுக்கு மாத்திரம் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் பொதுப்போக்குவரத்து சேவையினை மேற்கொள்ள வுள்ளதாக பொது போக்குவரத்து சேவை முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் ஆலோ சனைகளின் பிரகாரம் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில், குறித்த ஆலோசனைகளுக்கு அமைய, சேவைகளை மேற்கொள்வதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

# வவுனியா செட்டிக்குளம் பகுதியில் வீடு புகுந்து திருடர்கள் கொள்ளை

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று பிற்பகல் வேளையில் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் நகைகளை திருடிச் சென்றுள்ளதாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் கதவினை திறந்து அலுமாரியினை உடைத்து அதனுள் 40 ஆயிரம் ரூபாய் பணம் ஒரு பவுன் நகை திருடர்கள் திருடிச் சென்றுள்ளதோடு வீட்டில் இருந்த யன்னல் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளரான பெண் பிற்பகல் 2.15 மணியளவில் வேலை முடித்து வீடு திரும்பிய போது வீட்டின் கதவு மற்றும் யன்னல் கண்ணாடிகள் உடைந்து இருப்பதை அவதானித்து உடனடியாக அவசர தொலைபேசி இலக்கமான 119 க்கு அழைப்பினை ஏற்படுத்தி சம்பவத்தினை தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த செட்டிகுளம் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,250)

## நேற்று மட்டும் 71...

சாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளனர்.

அத்துடன், 396 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இதுவரை இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் 7 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கில் 15 பாட...

தனிமைப்படுத்துவதற்கு குறித்த பாடசாலைகள் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது. (ம-3,9)

## சீதுவ இராணுவ...

மில் பணியாற்றி வந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்தார்.

இந்நிலையிலேயே இவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தொற்றுடன் இவர் பல ருடன் பழகியிருக்கலாம் என்பதால் அதனை பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். (ம-3)

### கிருமி தொற்று ஏற்படாத விதமாக

# சடலங்களை பொதி செய்யும் ஆயிரம் அங்கிகளை கோரியது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சடலங்களில் இருந்து கிருமித் தொற்று ஏற்படாத விதமாக பொதி செய்யும் 1000 பாதுகாப்பு பொதிகளை வழங்குமாறு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை கேட்டு சுகாதார அமைச்சு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் டி அல்விஸ் கடிதம் அனுப்பப்பட்டதை உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், இலங்கையில் கோவிட்-19 அச்சுறுத்தலின் தீவிரத்தன்மை இதற்கு காரணம் அல்ல என்று அவர் கூறினார்.

தேவைப்பட்டால் பயன்படுத்த நாட்டில் பாதுகாப்பான கொள்கலன்கள் இல்லை என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) வலியுறுத்திய பின்னர், இதுபோன்ற 1,000 பாதுகாப்பு பொதிகளை வழங்கும் திறன் தங்கள் அமைப்புக்கு இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

நிர்வாக நடைமுறைகளின்படி, செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்படியான கோரிக்கையை சுகதார அமைச்சு விடுத்துள்ளது.

உடல்களை பொதி செய்யும் இந்த பாதுகாப்பு பொதிகள் உடல்களை தகனம்செய்வதற்கு மட்டுமல்ல, சந்தேகத்திற்குரிய சடலங்களை மீள எடுக்க வசதியாக புதைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. (ம-3)

## முப்படையினரால் பொது மக்களு...

அதிகாரிகள் சங்கம் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

04.04.2020 அன்று GMOA ஜனாதிபதியை சந்தித்து GMOA இன் COVID-19 வெளியேறும் மூலோபாயத்தை (Exit strategy) அவருக்கு வழங்கியதையும் குறிப்பிட்டிருந்ததுடன்.

அதில் அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA) இப்போது நாம் எதிர்கொள்ளும் தற்போதைய சூழ்நிலையைப் போன்ற சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பதை விரிவாக தெளிவுபடுத்தி இருந்தோம் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,9)

## தனிமைப்படுத்தல் முகாம் அமைப்பு...

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தென்பகுதியில் தொற்று வீதம் அதிகரித்துள்ளது.

இதனால் முப்படையினரையும் கடமைக்கு திரும்புமாறு அழைக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இருந்து விடுமுறைக்காக தென் பகுதிகளுக்கு சென்ற இராணுவத்தினரை தனிமைப்படுத்துவதற்காக அழைத்துவரப்படவுள்ளனர்.

இதற்காக இரண்டு விடுதிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 45 பேர் இங்கு அழைத்துவரப் படவுள்ளதாக இராணுவ அதிகாரி தெரிவித்தார். இவர்கள் 21 நாட்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளனர். மக்கள் அச்சமடைய தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,9)

# கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அழகாபுரி அ.த.க பாடசாலை

## தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இராமநாதபுரம் கிழக்கு அழகாபுரி அ.த.க.பாடசாலையை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இரணைமடு விமானப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.



இரணைமடு விமானப்படை முகாமின் ஒரு பகுதி தற்போது கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால் அங்குள்ள விமானப் படையினர் தற்காலிகமாக தங்குவதற்கு எனத்தெரிவித்து குறித்த பாடசாலையினை பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையின் அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அவரது அனுமதியுடன் பாடசாலையினை தங்களின் தேவைக்குப் பெற்றுள்ளதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலையினைச் சூழவும், கிராமத்திலும் பொதுமக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பிரதேசம் என்பதனால் பிரதேச பொது மக்கள் மத்தியில் அச்சமான சூழல் நிலவிவருகிறது. (ம-3)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 23 - 12 - 1950

இறப்பு 25 - 04 - 2020

## அமரர் இரத்தினம் சிவலிங்கம்

(முன்னாள் செயலாளர் - பழைய மாணவர் சங்கம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

அறிவு பரப்புஞ்சாலை அரிய பாடசாலை கொக்குவில் தந்த இந்து ஆரம்ப பாடசாலையின் பல்துறை வளர்ச்சிக்கு நீண்ட காலமாக பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக இருந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்த அமரர் இரத்தினம் சிவலிங்கம் அவர்களின் பிரிவுத் துயர் செய்தி கேட்டு பாடசாலை சமூகம் மிகுந்த துயரம் கொள்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
மற்றும் பழைய மாணவர் சங்கம், கொக்குவில்.

(C-9538

# மரண அறிவித்தல்



## சின்னையா செல்வபெருமாள்

மாத்தளையைப் பிறப்பிடமாகவும் விவேகானந்த நகர் கிழக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சின்னையை செல்வ பெருமாள் அவர்கள் நேற்று (26.04.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் ஜெகதீஸ், ஜெகதீஸ்வரன், பத்மா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீதரன், முருகதாஸ், வித்தி ஆகியோரின் மாமனாரும் மயூரதன், கோயுரதன், ருஜித் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் உடலம் தகனக் கிரியைக்காக இரணைமடு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.03, விவேகானந்த நகர்
கிழக்கு, கிளிநொச்சி.

(C-9539)

தகவல்:- மகன் (கேதீஸ்)
தொ.பே:- 077 152 6181

# மரண அறிவித்தல்



## கந்தர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி

(ஓய்வுநிலை இறக்குமதி முகாமையாளர்
Pettah Essence Suplliers, Dam Street Colombo - 12,
அகில இலங்கை சமாதான நீதவான்)

பிறப்பு: 17.02.1938

இறப்பு: 26.04.2020

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி அவர்கள் நேற்று (26.04.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மனோன்மணி தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - உருக்கு மணி ஆகியோரின் மருமகனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் ராஜலக்சுமி, சிவமூர்த்தி, காலஞ்சென்ற வரலக்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஜெயரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் medcon Colombo), காலஞ்சென்ற ஜெயசுதன், ஜெயசுரேஸ் (ஆசிரியர் - முத்துத்தம்பி வித்தியாலயம்), ஜெனதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாகாண கல்வித் திணைக்களம், வட மாகாணம்), ஜெனிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமேதா (ஆசிரியர் - இளையதம்பி இந்து வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), வித்தியா (ஆசிரியர் - மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), பிரபாலினி (அபிவிருத்தி உத்தி யோகத்தர் - மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு), அன்பரசன் (முகாமையாளர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தருனியா, அபிஷாலினி, அனுஸ்கா, அரிஸ்ணன், ஆராதனா, ஆரூஷன், ஆரூத்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காலகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(2665)

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:- 077 706 8632, 077 724 1026

# பதுளை குரு முதல்வர் இறைபதம் எய்தினார்



பதுளை மறை மாவட்டத்தின் குருமுதல்வர் அருட்பணி மார்ஷல் இராஜநாயகம் நேற்றுக் காலை இறைபதமெய்தினார்.

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த 50 வருடங்களாக பதுளை மறை மாவட்டத்தில் பதுளை, பண்டாரவளை, பசறை, லுணுகலை போன்ற பங்குத் தளங்களில் பணியாற்றியவர்.

மலையக தமிழ் மக்களின் கல்வி மற்றும் பொருண்மிய கட்டமைப்புக்களை மேம்படுத்துவதில் பெரும்பங்காற்றியவர்.

83 இல் நிகழ்ந்த இனக் கலவரத்தின்போது பண்டாரவளை பிரதேச தமிழ் மக்களை பாதுகாப்பதில் பெரும்பணியாற்றியதுடன், சகல இன மத மக்களதும் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

யாழைச் சேர்ந்த பெண்

# கொரோனாவால் கனடாவில் பலி



கனடாவில் வதியும் மேலுமொரு யாழ்ப்பாண பெண்மணி கொரோனா தாக்கத்தால் உயிரிழந்துள்ளார்.

திருமாவளவன் கமலேஸ்வரி என்ற பெண்மணியே கடந்த 23 ஆம் திகதி கனடாவில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவை சேர்ந்த இவர் நீண்டகாலமாக கனடாவில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


# கண்ணீர் அஞ்சலி

**பிறப்பு 23.12.1952 இறப்பு 26.04.2020**



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி **ஜீவனா விஷ்ணுவர்த்தன்**

அவர்களின் தந்தையார்

திரு. **இரட்ணம் சிவலிங்கம்**

அவர்கள்

இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-6536)

**உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலய பாடசாலைச் சமூகம்**

# 31 ஆம் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்



தோற்றம்:- 20.05.1953

மறைவு:- 30.03.2020

## அமரர் . செல்லத்துரை கலாமதி

இல.03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி செல்லத்துரை, செல்லத்துரை சிவக்கொழுந்து தம்பதியரின் மகள் கலாமதி 30.03.2020 அவரின் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர், யோகராஜா, சின்னையா (சின்னராசா), கோபாலகிருஷ்ணன் மற்றும் சண்முகராசா, அருளானந்தம், சிவபாக்கியம், ஜெயலட்சுமி, சிவசோதி, நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முத்து சுப்பையா, சிவகுருநாதர்-பராசக்தி மற்றும் கார்த்திகேசு, கோபாலசிங்கம், கந்தையா, மருதவாணன், யோகராசா-பத்மராணி, கோபாலகிருஷ்ணன்-பிறேமா, சண்முகராசா-ருக்மணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 27.04.2020 இன்று காலை 8 மணிக்கு யாழ். கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 29.04.2020 புதன்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். இவரின் மரணச்செய்தி கேட்டு எம்முடன் நேரடி தொடர்பு கொண்டவர்களுக்கும் தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.

(2664)

**இல.03, ஸ்ரான்லி கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**


# இராசிபலன்

27.04.2020

சித்திரை 14, திங்கட்கிழமை

சதுர்த்தி பிற்பகல் 12.36 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 10.22 மணிவரை

சுபநேரம் 11.59-1.29 மணிவரை

இராகுகாலம் 7.29-8.59 மணிவரை

சந்திராஷ்டமம்-அனுசம், கேட்டை

அமிர்தசித்தம்



**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



**ரிஷபம்** — சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம்.



**மிதுனம்** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கடகம்** — சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அலைச்சல்கள் சற்று கூடும்.



**சிம்மம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.



**கன்னி** — புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**துலாம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.



**விருச்சிகம்** — மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், உடல்நலனில் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.



**தனுசு** — நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.



**மகரம்** — சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வெற்றிதரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கும்பம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மீனம்** — புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குற்றவாளி பிறரையும் குற்றவாளி எனக் கருதுவான்

ஒரு மணியைப் போலத்தான் நல்ல செயல்களும் சொர்க்கத்தின் வாசலில் பெரிய ஓசையை எழுப்பும்.
– ரிச்சர்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆற்றாது அழுத கண்ணீரோ அகிலத்தைப் புரட்டுகிறது

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றார் வள்ளுவர்

வள்ளுவர் கூறிய குறளின் தத்துவம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இங்கு யார் யார் வாய்க் கேட்பினும் என்பது எவை எழுகை பெற்றாலும் அதற்கான உண்மைப் பொருளைக் கண்டறிவதே அறிவு ஆகும் எனப் பொருள் தரும்.

அந்த வகையில், உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்து நிற்கின்ற கொரோனாத் தொற்று இத்துணை தூரம் வியாபித்து மனித உயிர்களைக் காவு கொள்கிறது எனில், இது ஏன்? நடக்கிறது என்ற உண்மைப் பொருளை நாம் அறிந்தாக வேண்டும்.

விண்வெளியில் சஞ்சரிக்கக்கூடிய விஞ்ஞானம் ஒருபுறம், மனித உடல் கூற்றியல் மருத்துவத்தின் உச்சம் மறுபுறமாக இருக்கின்ற போதிலும் கொரோனாக் கிருமிக்குத் தடை விதிக்க முடியாத அளவில் விஞ்ஞான மருத்துவ உலகம் திணறுகிறது.

அதுமட்டுமல்ல; எத்தனையோ மருத்துவர்கள், விஞ்ஞானிகள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி இறந்து போயுள்ளனர்.

இதற்கு மேலாக, உலக வல்லரசு என்று மார்தட்டும் அமெரிக்கா கொரோனாவினால் சின்னாபின்னப்பட்டு நிற்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி பதட்டமடைந்தவராக கிருமிநாசினியைக் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு மருந்தாகக் கொடுக்கலாமா என்று பரிசோதனை நடத்த வேண்டும் என்கிறார்.

இந்தக் கருத்தை வேறு எவர் கூறியிருந்தாலும் இந்த உலகம் கெக்களம் கட்டிச் சிரித்திருக்கும்.

ஆனால் சொன்னவர் அமெரிக்க ஜனாதிபதி. அதிலும் கொரோனாத் தொற்றினால் அமெரிக்கா ஆடி நிற்பது அவரைக் கடும் கோபப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்தா விட்டாலும் தன்னோடு சீண்டுகிறவரையாவது அடித்து நொருக்கி தன்னை ஆற்றுப்படுத்த வேண்டும் என்ற மனநிலையில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் இருப்பதனால், அவர் கூறிய கருத்துப் பற்றி எவரும் வாய் திறந்திலர்.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளதாக வந்த பாராட்டுக்களை மீளப் பெறுகின்ற அளவில், கொரோனாத் தொற்று இலங்கையில் சன்னதம் ஆடத் தலைப்பட்டுள்ளது.

அதிலும் படைத்தரப்பை பதம் பார்க்கின்ற அளவில் கொரோனா வேகம் கொண்டிருப்பது, புதிய சிக்கல்களை ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கக் கூடியதாக உள்ளது என்றால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆக, இவை எல்லாவற்றையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கும்போது; அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற மானிடத்தின் அவலக்குரல் உலகெங்கும் கேட்கிறது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காதீர்

(கொழும்பு)

இலங்கைத் தேர்தல் சட்டத்திற்கு அமைவாகவே நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். இந் நிலையில் திட்டமிட்ட திகதி மாற்றம், ஒத்திவைப்பு என்று எமது அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை செயற்படுத்துமாறு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார்.

தற்போதைய சூழலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மிகக் கிட்டியதொரு தினமாகவே ஜூன் 20ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவசர நிலைமைகள் தோற்றம் பெற்றால் மட்டுமே அத்திகதி மாற்றப்படும் என்றும் மே 2 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் விசேட மாற்றங்கள் எவையும் ஏற்படுவதற்கான சத்தியங்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் குறித்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு புதிய பாராளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்பதே நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்படுகின்றது.

அதற்கமைவாக நாங்கள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து நடவடிக்கைகளை எடுத்திருந்த போதும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளால் உரிய காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்த முடியாது போயுள்ளது.

இவ்வாறான நிலையில் தான் எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டது. இந்தத் திகதியில் தேர்தலை நடத்தக்கூடாது என்று எமக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. மேலும் மூன்று மாதங்கள் கடந்த நிலையில் தேர்தல் நடத்தப்படுவது பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றார்கள்.

பழைய பாராளுமன்றத்தைக் கூட்டுமாறும் சில தரப்பினர் வலியுறுத்துகின்றார்கள். மறுபக்கத்தில் எம்மை சுயாதீன ஆணைக்குழுவாக அறிவித்தபோதும் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை மறைமுகமாக பிரயோகிக்கின்றார்கள்.

எனவே இத்தகைய பின்னணிகளில் தான் நாம் தேர்தல் திகதியை அறிவித்திருக்கின்றோம். நாட்டில் காணப்படும் 1981 ஆம் ஆண்டு முதலாம் இலக்க தேர்தல்கள் திருத்தச்சட்டத்திற்கு அமைவாகவே நாம் அறிவிப்புக்களைச் செய்துள்ளோம். அதாவது, தேர்தல் நடத்துவதற்கு முன்னதாக ஐந்து முதல் ஏழுவாரங்கள் வரையில் பிரசாரப் பணிகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்டவற்றுக்கான கால வேளையை வழங்கும் வகையில் அத்திகதி அறிவிக்கப்பட்டது.

எனவே திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவிற்கு வெவ்வேறு வகையான அழுத்தங்களைப் பிரயோகிப்பதால் எந்தவிதமான பயனுமில்லை.

தற்போது அரசியல் அமைப்பு நெருக்கடி ஏற்படும் என்றும் கூறுகின்றார்கள். இவ்வாறான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவிடம் இல்லை.

அதிகாரங்கள் இல்லாத ஆணைக்குழுவிற்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதால் பயனில்லை.

பாராளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கோ அல்லது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து தேர்தல் நடத்துவதற்கான காலத்தை அதிகரிக்கும் அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளுதல் உட்பட இப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் சகல அதிகாரங்களையும் ஜனாதிபதியே கொண்டிருக்கின்றார்.

எனவே தீர்வை வழங்கக் கூடியவரை நாடுவதை விடுத்து தீர்வை வழங்க முடியாத வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஆணைக்குழுவிற்கு அழுத்தங்களை பிரயோகிப்பதால் எதுவும் நடைபெறப்போவதில்லை.

மேலும் மே இரண்டாம் திகதி நடைபெறும் கூட்டத்தில் பெரும்பாலும் தேர்தல் திகதி உள்ளிட்ட எந்தவிடயங்களிலும் மாற்றங்களை மேற்கொள்வதற்கு குறைந்தளவான சாத்தியங்களே காணப்படுவதாகவும் ஒரு வேளை நிலைமைகள் மோசமடைந்தால் தேர்தல் திகதிக்கு சொற்பகாலம் முன்னதாக மாற்றுவழி முறை குறித்த அறிவிப்புக்களை ஆணைக்குழு விடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன் மார்க்கட்டு பிரதேசம், நாவலர் வீதி கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டி வீதி வரை, பாரதி வீதி, புறூடி வீதி, நொத்தாரிஸ் லேன், நல்லூர் குறுக்கு வீதி, கண்டி வீதியில் கச்சேரியிலிருந்து கண்டி வீதி செம்மணி வரை, இலந்தைக்குளம், புங்கன் குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்குப் பிரதேசம், செல்லர் வீதி, ராணி வீதி, யாழ்.மாநகர சபை அலுவலகம், Ministry Of Education, Carlton Sports Network (CSN), அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, SOS Children Village ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நோயால் உயிர் போவதை விட பயத்தால் மனிதன் அதிகம் உயிரிழக்கிறான். ஆகையால் பயம் நெருங்காத அளவில் இருங்கள். -காந்தியடிகள்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வேதாந்தம்- சித்தாந்தம்



தத்துவ ஞானியின் வாய் மொழியாகவோ அல்லது நூல் வழியாகவோ ஞான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டால் மட்டும் போதாது. முறையான அறிவுப் பயிற்சியும் வேண்டும். அக நோக்குப் பயிற்சி என்னும் உள்ளொடுங்கு பயிற்சியின் மூலம் அறிவை உயிரில் ஒன்றச் செய்து, உயிரே தனது அடக்கத்தில் தன் மூலமான மெய்ப் பொருளாக மாறி நிற்கும் தன்மையை அநுபோக பூர்வமாகப் பெற்றாக வேண்டும்.

தானே அவனாகவும், அவனே தானாகவும் - சிவனே சீவனாகவும், சீவனே சிவனாகவும் இருக்கும் நிலையை உரைமூலம் கேட்டு அறிவதோடு, மனதைப் பழக்கி, அந்த மனதின்னுள்ளேயே செலுத்தும் தவத்தின் மூலமாகவும் உணர்ந்து பார்க்கும் போது தான், தெளிவோடு திருப்தியும் வரும். இதை நமது மனவளக்கலை மூலம் சாதிக்க முடிகிறது.

தோற்றங்களெல்லாம் பஞ்சபூதக் கூட்டென்றும், பஞ்ச பூதங்கள் அணுவின் திரட்சி வேறுபாடென்றும், அணு இறைநிலையின் இயக்க நிலையென்றும் விளக்கம் சொல்வது வேதாந்தமாகும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உயிர்கள் அனுபோகம் பெறுவது இன்பம் துன்பம் இரண்டும் தான் உண்டு.

அந்த இன்ப துன்பங்கள் உணரப் பெறுவது மனதிலே, ஆராய்ச்சியில் உயிரே மனமாகவும், இறைவனே உயிராகவும் இருப்பதைக் கண்டு அந்த இறைவனே நானாகவும், எல்லாமாகவும் இருக்கிறான் என்று சொல்வது சித்தாந்தமாகும். துன்பத்தின் காரணத்தை அறியாதாரும் துன்பத்தைத் தோற்றுவிக்காமல், இன்பம் மட்டுமே விளையத்தக்க வகையில் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும் விதமாக, இன்ப துன்ப இயல்பறிந்தோர் வகுத்த வாழ்க்கை முறையே பக்திமார்க்கம்.

# அமெரிக்காவில் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கும் கொரோனா!

## நாள்தோறும் இரண்டாயிரம் பேர் உயிரிழப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 65 பேர் உயிரிழந்தனர்.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியது. இதற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸால் ஏற்படும் பாதிப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி. 29 இலட்சத்து 20 ஆயிரத்து 738 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸின் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் 2 இலட்சத்து 3 ஆயிரத்து 255 பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் கோரத்தாண்டவமாடி வருகிறது.

வைரஸ் பரவியவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் உலகளவில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதனால் அங்கு பலியானோர் எண்ணிக்கை 54 ஆயிரத்தைத் கடந்தது.

இதேவேளை நேற்று காலை 9 மணி நிலவரப்படி. அமெரிக்காவில் 9 இலட்சத்து 60 ஆயிரத்து 651 பேருக்கு கொரோனா பரவியது உறுதியானது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 35 ஆயிரத்து 419 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 65 பேர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 54 ஆயிரத்து 256 ஆக அதிகரித்தது. (இ-2)



## கொரோனாவுக்கு எதிரான போரில் ஒவ்வொரு குடிமகனும் படைவீரனே

### பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

கொடிய கொரோனா வைரஸ்"க்கு எதிரான போரில் ஒவ்வொரு குடிமகனும் படைவீரனே! என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மன் கி பாத் என்ற நிகழ்ச்சியின் மூலம் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 11 மணியளவில் அகில இந்திய வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார்.

இந்த மாதத்திற்கான 'மன் கி பாத்' வானொலி நிகழ்ச்சி நேற்று இடம்பெற்றது. இதில் கொரோனா வைரஸ்"க்கு எதிரான போரில் ஒவ்வொரு குடிமகனும் படைவீரனே என பிரதமர் மோடி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ்"க்கு எதிரான போரில் இந்தியா ஈடுபட்டுள்ளது. மக்களும் நிர்வாகமும் இணைந்து நடத்தும் இந்தப் போரில் ஒவ்வொரு குடிமகனும் படைவீரனே.

சுகாதாரப் பணியாளர்களின் பணி போற்றப்படுகிறது. உலக நாடுகளுக்கு தேவையான உதவிகளை இந்தியா செய்து வருகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார். (இ)

## கொரோனாத் தொற்றால் இங்கிலாந்தில் எகிறும் பலி 20 ஆயிரத்தைத் தாண்டியது

(லண்டன்)

கொரோனா வைரஸ் தொற்றால் இங்கிலாந்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 813 பேர் பலியாகினர். இதனால் வைரஸ் தாக்குதலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டியது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுத்து வருகிறது. அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய 4 நாடுகளில் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இங்கிலாந்திலும் கொரோனா தாக்குதலுக்குப் பலியானோர் எண்ணிக்கை நேற்றுக்காலை 20 ஆயிரத்தைக் கடந்தது. இதனால் பலி எண்ணிக்கையில் 20 ஆயிரத்தைக் கடந்த நாடுகள் பட்டியலில் 5 ஆவது நாடாக அந்நாடு இடம்பெற்றது.

இங்கிலாந்தில் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 377 பேருக்கு கொரோனா பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 4 ஆயிரத்து 913 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 813 பேர் பலியாகினர். இதனால் இங்கிலாந்தில் கொரோனாவால் 20 ஆயிரத்து 319 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. (இ-2)

## இந்தியாவில் கொரோனா பாதிப்பு 26 ஆயிரத்து 500 ஆக அதிகரிப்பு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 26 ஆயிரத்தைத் தாண்டியது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்தது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் மே 3-ம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டது.

ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 26 ஆயிரத்தைத் தாண்டியது.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட செய்தியில், இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 500 ஆக அதிகரித்தது.

மேலும், கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 5,804 ஆக உள்ளது. அதேபோன்று, கொரோனா பாதிப்பால் பலியானோர் எண்ணிக்கை 824 ஆக உயர்ந்தது.

இதேவேளை நேற்றுக் காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை1990 ஆக உள்ளது, கொரோனாவால் 49 பேர் உயிரிழந்தனர். (இ-2)




## சீனாவில் புதிதாக 12 பேருக்கு கொரோனா உறுதி

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

சீனாவின் வுஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் பல உலக நாடுகளில் பரவியது. எனினும், வுஹானில் ஊரடங்கை அமுல்படுத்தி வைரஸ் பரவலைக் கட்டுக்குள் கொண்டு வந்தது சீனா.

ஊரடங்கு தளர்வும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், சீனாவில் நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிதாக 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதில் ஹிலோங் ஜியாங் மாகாணத்தில் உள்ளூர் அளவில் ஒருவருக்கு பரவியது.

மீதி 11 பேரும் வெளிநாட்டுப் பயண தொடர்புடையவர்கள் எனத் தெரிய வந்தது.

கடந்த 10 நாட்களாக ஒருவர் கூட சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கியதில் உயிரிழக்கவில்லை. அதே வேளை 89 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சையின் பின் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பினர்.

கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தோர் எண்ணிக்கையும் 49 இல் இருந்து 8 ஆகக் குறைந்தது.

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்கள் எண்ணிக்கை 82 ஆயிரத்து 800-ஐ கடந்தது. கொரோனாவால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 632 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# இராணுவம் அதிரடித் தாக்குதல் பயங்கரவாதிகள் 89 பேர் பலி!



(அபுஜா)

நைஜீரிய இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையில் 89 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும், பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த 5 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம், ஐ.எஸ். உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

இந்த பயங்கரவாத குழுக்கள் பாதுகாப்பு படையினரையும் பொதுமக்களையும் குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர். இந்தத் தாக்குதல்களுக்கு பாதுகாப்புப் படையினரும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், நைஜீரியாவின் சஃப்பாரா மாகாணம் சூர்மி பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக இராணுவத்திற்கு இரகசியத்தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் பயங்கரவாதிகளைக் குறிவைத்து அதிரடி தேடுதல் வேட்டை நடத்தினர்.

இந்த தேடுதல் வேட்டையில் சூர்மி பகுதியில் பதுங்கியிருந்த 89 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்த 3 பெண்கள் உட்பட பணயக்கைதிகள் 5 பேர் மீட்கப்பட்டனர்.

தேடுதல் வேட்டையின் போது பயங்கரவாதிகளால் திருடப்பட்ட 322 மாடுகள், 77 இரு சக்கர வாகனங்கள், 9 தொலைபேசிகள் மீட்கப்பட்டன. மிகப்பெரியளவில் ஆயுதங்களும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டன.

பயங்கரவாதிகளுடன் நடந்த இந்தச் சண்டையில் நைஜீரிய படையினர் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-2)

# கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் கடமைகளை பொறுப்பேற்கும் போரிஸ்



(லண்டன்)

கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளாகியிருந்த பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் இன்று முதல் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்கிறார்.

உலகமெங்கும் பல பாதிப்புக்களை ஏற்படுத்திவரும்கொரோனா வைரஸால் பிரித்தானியாவும் பல உயிரிழப்புக்களைச் சந்தித்து வரும் அதேவேளை இலட்சக்கணக்கானவர்கள் வைரஸ் தொற்றுக்கு இலக்காகி வருகின்றனர். இந்நிலையில் கடந்த மாதம் பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகினார்.

ஆரம்பத்தில் நோய்த்தொற்றுக்கான அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டமையினை தொடர்ந்து சுயதனிமைப்படுத்தலுக்கு தன்னை உட்படுத்திய அவர், பின்னர் நோய்த்தாக்கம் அதிகரித்த காரணத்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தீவிர சிகிச்சைப்பிரிவில் இணைக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து நலம் பெற்று வீடு திரும்பிய பேரிஸ் ஜோன்சன் மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகளை போரிஸ் ஜோன்சன் தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என எதிர்க்கட்சிகளால் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. இந்நிலையில் போரிஸ் ஜோன்சன் இன்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்கிறார். 'டவுனிங் ஸ்ட்ரீட்' இன் உத்தியோகபூர்வ செய்தி தொடர்பாளர் இவ்வறிவித்தலை விடுத்துள்ளார்.

பிரித்தானியாவில் இது வரையான காலப்பகுதியில், கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகி 20,319 பேர் உயிரிழந்த நிலையில் குறித்த வைரஸ் தாக்கத்தால் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 377 பாதிக்கப்பட்டனர்.

இதன் காரணமாக பிரித்தானிய ஆளும் கொன்சர்வேட்டிவ் அரசாங்கம் பல விமர்சனங்களை எதிர்கொண்டு வரும் நிலையில் போரிஸ் ஜோன்சன் மீண்டும் கடமைக்குத் திரும்புவது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# கிம் உடல் நிலை கவலைக்கிடம்

## மருத்துவ ஆலோசனை வழங்க குழுவை அனுப்பிய சீனா



(பியாங்யாங்)

கிம் ஜாங் உன்னுக்கு உடல் நிலை சார்ந்த ஆலோசனைகளை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழுவை சீனா, வடகொரியாவுக்கு அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக நாடுகள் அனைத்தும் கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடி வருகிற இந் நிலையில் வட கொரியாத் தலைவர் கிம் ஜாங் உன் சமீப நாட்களாக வெளி உலகிற்கு வரவில்லை. கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற வடகொரியாவின் நிறுவுநரும், தனது தாத்தாவுமான கிம் இல் சுங்கின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கிம் ஜாங் உன் கலந்து கொள்ளவில்லை.

2011-ஆம் ஆண்டு தலைவராக வந்தபின் முதல் முறையாக இந்த நிகழ்ச்சியை கிம் ஜாங் உன் தவிர்த்ததால் இது பல சந்தேகங்களை எழுப்பியது. இதனிடையே சமீபத்தில் கிம் ஜாங் உன்னுக்கு நடந்த இதய அறுவை சிகிச்சைக்கு பின்னர் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பிரபல அமெரிக்க செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அமெரிக்க உளவுத்துறையும் இதை தீவிரமாக கண்காணித்து வருவதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் கிம் ஜாங் உன்னுக்கு உடல் நிலை சார்ந்த ஆலோசனைகளை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழுவை சீனா, வட கொரியாவுக்கு அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சீன வெளியுறவுத்துறையின் மூத்த உறுப்பினர் தலைமையிலான தூதுக்குழு கடந்த சனிக்கிழமை பீஜிங்கில் இருந்து வட கொரியாவுக்கு புறப்பட்டதாக வடகொரியா விவகாரங்களை கையாளும் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக பாகிஸ்தானுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் சீனா



(இஸ்லாமாபாத்)

ஆசிய நாடான பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் தொற்று மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கமைய பாகிஸ்தானில் நேற்றைய நிலவரப்படி 12, 723 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 269பேர் உயிரிழந்துள்ளனர்.

இந் நிலையில், அங்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக மேலும் இரண்டு வாரங்களுக்கு அதாவது மே 9ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு நட்பு நாடான சீனா தொடர்ந்து உதவி செய்து வருகிறது.

அந்த வகையில், சீனாவில் கொரோனா வைரசுக்கு சிகிச்சை அளித்த இராணுவ மருத்துவர்கள் 10 பேர் கொண்ட குழு, பாகிஸ்தானுக்கு சென்றுள்ளது.

அத்துடன், இரண்டு விமானங்களில் மருந்துப் பொருட்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் மொத்த கொரோனா பாதிப்பில் 79 சதவீதம் சமூகப்பரவல் மூலம் ஏற்பட்டது தெரியவந்துள்ளது. (2)

# ஒருபுறம் கொரோனா அச்சம்; மறுபுறம் ஏவுகணை பரிசோதனை

(இஸ்லாமாபாத்)

கொரோனா அச்சுறுத்தல் மற்றும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாகிஸ்தான் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை சோதனை நடத்தியது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான் அரசு, ஊரடங்கால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார இழப்பை ஈடுகட்ட முடியாமல் திணறி வருகிறது. இதனால் பாகிஸ்தானின் பொருளாதாரப் பிரச்சினையை சரி செய்ய சர்வதேச நிதியம் அந்நாட்டுக்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. அதே போல் அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா அச்சுறுத்தல் மற்றும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாகிஸ்தான் நேற்று முன்தினம் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவி பரிசோதித்தது. அரேபிய கடல் பகுதியில் இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் கடற்படை தெரிவித்துள்ளது. இது குறித்து கடற்படை செய்தி தொடர்பாளர் அர்ஷித் ஜவத் கூறுகையில், "போர்க்கப்பல்கள் மற்றும் ஹெலிகொப்டர்களில் இருந்து ஏவப்பட்ட கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் கடலில் வைக்கப்பட்டிருந்த இலக்குகளை துல்லியமாக தாக்கி அழித்தன" எனத் தெரிவித்தார்.

மேலும், "இந்த ஏவுகணைகள் அதிநவீன தொழில்நுட்பத்துடனும், வான் பயண மின்னணுவியல் தொழில்நுட்பத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை மிக துல்லியமாக கடலில் உள்ள இலக்குகளை தாக்கும் வல்லமை படைத்தவையாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த ஏவுகணை சோதனை பாகிஸ்தான் கடற்படையின் செயற்பாட்டு திறன் மற்றும் இராணுவ தயார் நிலைக்கு ஒரு சான்றாகும்" என கடற்படைத் தளபதி தெரிவித்தார். மேலும் "எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு தகுந்த முறையில் பதிலளிக்க பாகிஸ்தான் கடற்படை முழு திறன் கொண்டது. பாகிஸ்தான் கடற்படை எந்தவொரு நிலையிலும் தாய்நாட்டையும், அதன் நீர் எல்லைகளையும் பாதுகாக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (2)

# கடற்படையினருக்கு கொரோனா
# பி.சி.ஆர்.பரிசோதனை விரைவுபடுத்தல்

## பொதுமக்களே! அச்சம்,கவலை வேண்டாம் கடற்படைத்தளபதி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

வெலிசர கடற்படைத் தளத்தி லுள்ள கடற்படை வீரர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளும் பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதி பூர ணமாக முடக்கப்பட்டதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட் மிரல் பியால் டி சில்வா தெரிவித் தார்.

24.04.2020 மேலும் 30 கடற்படை வீரர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கொரோனா வைரஸால் பாதிக்கப் பட்ட கடற்படை வீரர்களின் எண் ணிக்கை 60 ஆக அதிகரித்ததாக வும் இன்று முதல் நாளொன்றுக்கு 400 பி.சி.ஆர்.சோதனைகளை மேற்கொள்ள கடற்படை நடவ டிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ் பரவுவ தைக் கட்டுப்படுத்த இலங்கைக் கடற்படை ஏற்கனவே உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ள தால், இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் அடையவோ, கவலைய டையவோ வேண்டாம் எனவும் கடற்படைத் தளபதி கேட்டுக்கொ ண்டார்.

கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளானவர்களுடன் நெரு ங்கிய தொடர்புகளைப் பேணிய கடற்படை வீரர்களிடம் கவனம் செலுத்தல், விடுமுறையில் சென்றி ருந்தவர்களை மீள அழைத்தல் ஆகிய முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகள் இலங்கைக் கடற்படை யினரால் மேற்கொள்ளப்பட்டதாக வும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக் கட ற்படை நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில், 4,000 கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் வெலிசர கடற்படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட் டனர்.

விடுமுறையில் இருந்தபோது பொலநறுவையைச் சேர்ந்த ஒரு கடற்படை வீரர் கொரோனா வைர ஸால் பாதிக்கப்பட்டார் என்பதை உறுதிசெய்த பின்னர், பாதிக்கப் பட்டவருடன் அலுவலகத்தில் பணி புரிந்த வெலிசர கடற்படைத் தளத் திலுள்ள ஏனைய கடற்படை வீரர்களுக்கும் வைரஸ் பரவியது தொடர்பாகக் கண்டறிய பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வெலிசர கடற்படை வளாகத்தை சுகாதார முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக முடக் கும் செயற்பாட்டை கடற்படை உட னடியாக முன்னெடுத்தது. சுமார் 4,000 கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் வெலிசர கடற்படை வளாகத்தி லுள்ள முகாமுக்குள் தனிமைப் படுத்தப்பட்டதுடன் அவர்கள் மிக விரைவில் பரிசோதனை நடவ டிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ள னர். அத்துடன் விடுமுறை யிலிருந்த பாதிக்கப்பட்ட கடற்படை வீரருடன் நெருங்கிய தொடர்பு களைப் பேணிய கடற்படை வீரர் கள் கடற்படைத் தளத்திற்கு அழை க்கப்பட்டனர்.

இந்தப் பின்னணியில், இலங் கைக் கடற்படை ஏற்கனவே நிறு வன அளவில் நன்கு திட்டமிடப் பட்ட தனிமைப்படுத்தப்பட்ட பணி யில் ஈடுபட்டதுடன், அதன் நடவடி க்கைகள் தற்போது சுகாதாரத் துறையின் வழிகாட்டுதலுக்கேற்ப இடம்பெற்று வருகின்றன.

எனவே, கடற்படை வீரர்களின் ஆரோக்கியம் தொடர்பாக , பொது மக்கள் தேவையற்ற முறையில் கவலையடையத் தேவையில்லை. மேலும், கடற்படை வீரர்கள் விடு முறையில் இருந்தால் தற்காலி கமாக வீடுகளில் தனிமைப்படுத்தி வைப்பதற்கும், வெலிசர கடற் படை வளாகத்திலுள்ள அனைத்து கடற்படை நடவடிக்கைகளையும் சுகாதார பரிசோதனைகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்குவதற் கும், வைரஸ் பாதிப்புக்குள்ளான வர்களை வைத்தியசாலையில் சேர்ப்பதற்கும் சிகிச்சையளிப் பதற்கும் தேவையான நடவடி க்கை எடுக்கப்பட்டது.

மேலும், விடுமுறை அல்லது உத்தியோகபூர்வ கடமைகளிலிரு ந்து கடற்படைத் தளங்களிலிருந்து விலகி இருக்கும் கடற்படை வீரர் களின் தகவல்கள் கடற்படைத் தலைமையகத்திலுள்ள என அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டது. (இ)

## நடுக்கடலில் சிக்கித் தவிக்கும் 500 ரோஹிஞ்யா அகதிகளுக்கு அனுமதி மறுத்த பங்களாதேஷ்!



(டாக்கா)

வங்காள விரிகுடாவில் இர ண்டு மீன்பிடி இழுவைப் படகு களில் சிக்கித் தவிக்கும் சுமார் 500 ரோஹிஞ்யா அகதிகளை கரைக்குக் கொண்டு வருவதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்தது.

பங்களாதேஷின் இந்தத் தீர் மானத்துக்கு சர்வதேச மனித உரிமைக் குழுக்களும் விமர்ச னங்களை வெளியிட்டன.

எனினும் பல வாரங்களாக கடலில் சிக்கித் தவிப்பதாகக் கூறப்படும் ரோஹிஞ்யா அகதி களுக்கு அடைக்கலம் அளிப்பது பங்களாதேஷின் பொறுப்பு அல்ல என்று அந் நாட்டு வெளியுறவு அமைச்சர் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை சர்வதேச ஊடகங்க ளிடம் தெரிவித்தார்.

அத்துடன் ரோஹிஞ்யர் களை அழைத்துச் செல்லுமாறு ஏன் பங்களாதேஷ்"க்கு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகிறது, அவர்கள் ஆழ்கடலில் உள்ளனர். பங்களா தேஷின் கடற் பிராந்தியத்திலும் கூட இல்லை. வங்காள விரிகுடா வைச் சுற்றி குறைந்தது எட்டு கடலோர நாடுகள் உள்ளன என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக இவர்களுக்கு அடைக்கலம் வழங் குவதற்கு மலேசிய அரசாங்கம் மறுத்த நிலையில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங் லாக சுமார் 500 ரோஹிஞ்யா அகதிகள் இரண்டு மீன்பிடி இழு வைப் படகுகளில் வங்காள விரி குடாவில் சிக்கித்தவிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பான யு.என். எச்.சி.ஆர்.இன் கூற்றுப் படி, பல வாரங்களாக நடுக்கடலில் சிக்கித் தவிக்கும் இவர்களுக்கான போது மான உணவும் தண்ணீரும் இல்லை.

இதேவேளை சில வாரங்க ளுக்கு முன்பு மலேசியாவை அடை யத் தவறியமையால் மோசமான நிலையிலிருந்த படகொன்றில் நடுக்கடலில் தத்தளித்துக் கொண் டிருந்த 396 ரோஹிஞ்யா அகதி களை மீட்டதாகவும் அந்த அமை ப்பு மேலும் சுட்டிக்காட்டியது. (இ)

## கொரோனா வைரஸ் தாக்குதலால் குழந்தைகளுக்கு புதிய ஆபத்து

### யுனிசெப் எச்சரிக்கை

(நியூயோர்க்)

கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக குழந்தைகளுக்குப் புதிய ஆபத்து ஏற்படும் சூழல் உள்ளதாக ஐ.நா. சபையின் அங்க மான யுனிசெப் எச்சரித்தது.

சீனாவில் தோன்றிய கொடிய கொரோனா வைரஸ் தொற்று நோய், கிட்டத்தட்ட உலக நாடுகள் அனைத்திலும் பரவி விட்டது.

இந்த வைரஸ் நோய்க்கு எதி ராக உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு போர் தொடுத்து வருகின்றன. எல்லா நாடுகளும் கொரோனா வைரஸ் பாதிப்பி லிருந்து முற்றிலுமாக மீள்வது எப்படி என்பதில்தான் கவனம் செலுத்தி வருகின்றன. இதில் பல நாடுகள் ஊரடங்கையும் அறிவித் துள்ளன. இதனால் வீடுகளுக்குள் மக்கள் முடங்கிக் கிடக்கின்றனர்.

இந்நிலையில் ஐ.நா. சபை யின் குழந்தைகள் நிதி அமைப் பான யுனிசெப் நேற்று ஒரு அறிக் கையை வெளியிட்டது.

அதில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதால் உலகமெங்கும் உள்ள கோடிக் கணக்கான குழந்தைகளுக்கு தட்டம்மை, டிப்தீரியா, போலியோ ஆகியவற்றுக்கு எதிராக தடுப் பூசிகள் போடுவதை இழக்கிற ஆபத்து ஏற்பட்டுள்ளது. பெரும் பாலான நாடுகள் போலியோ சொட்டு மருந்துகள் வழங்கும் முகாம் களை நிறுத்தி வைத்துள்ளன. 25 நாடுகளாவது தட்டம்மை தடுப்பூசி முகாம்களை ஒத்திப்போட்டுள் ளன.

இந்தக் கொரோனா வைரஸ் தொற்று நோய் தோன்றுவதற்கு முன்புகூட, ஒரு வயதுக்குட்பட்ட 2 கோடி குழந்தைகள் போலியோ, தட்டம்மை உள்ளிட்ட பல்வேறு தடுப்பு மருந்துகளைப் பெறுகிற வாய்ப்பை இழந்திருக்கின்றன.

இப்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருகிற நிலையில், குழந்தைகளுக்குத் தேவையான தடுப்பு மருந்துக ளைக் கொடுக்க முடியாத சூழலால் இந்த ஆண்டு மட்டுமின்றி அதைத் தாண்டியும் குழந்தைகளுக்கு பேர ழிவை ஏற்படுத்துகிற தட்டம்மை, டிப்தீரியா, போலியோ உள்ளிட் டவை பேரழிவை ஏற்படுத்தும் அச்சம் உள்ளது என அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யுனிசெப் அமைப் பின் முதன்மை ஆலோசகரும், தலைமை நோய்த் தடுப்பாளரு மான ராபின் நந்தி கருத்து கூறு கையில், "இதுவரை இல்லாத வகையில் குழந்தைகளின் நலன் ஆபத்தில் உள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுநோய் உலகள வில் பரவும் நிலையிலும், குழந் தைகளுக்கு தடுப்பூசிகள் வழங் கும் உயிர் காக்கும் பணி முக்கி யமானது. அவர்களுக்குத் தேவை யான தடுப்பூசிகளை வழங்காவிட் டால், பலகோடி இளம் உயிர்க ளின் தலையெழுத்து சிக்கலாகி விடும்" என அவர் மேலும் தெரி வித்தார். (இ)



